

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 11-12-2024


# வைக்கம் வீரருக்கு விழா 1

**வைக்கத்து வீரர் என யாரைச் சொன்னோம்?**
**‘வை கத்தி!’ தீண்டாமைக் கழுத்தில் என்று**
**வரிப்புலியாய்க் களம் சென்று வாகை சூடி**
**வைத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம் வீரர்!**

- என்று எழுதினார் தமிழினத் தலைவர் கலைஞர்! அத்தகைய பெருமை மிகு பெரியாருக்கு வைக்கத்தின் மாபெரும் நினைவுச் சின்னத்தை எழுப்பி 12 ஆம் தேதியன்று திறந்து வைக்க இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**வைக்கத்தில் ஏற்கனவே இருந்த நினைவகமானது புதுப்பிக்கப்பட்டுள்ளது. கூடுதல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அறிவாசான் பெயரில் நூலகம் அமைக்கப் பட்டுள்ளது. இதனைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களும் இணைந்து திறந்து வைக்கிறார்கள்.**

வைக்கம் போராட்டம் என்பது 1924 ஆம் ஆண்டு நடைபெற்றது. இது நூற்றாண்டு விழா ஆண்டு. நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிய தமிழ்நாடு அரசு, வைக்கத்தில் உள்ள நினைவுச் சின்னத்தை மறுசீரமைப்பு செய்யவும் திட்டமிட்டது. எட்டு கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிவுற்று திறப்பு விழாக் காண்கிறது வைக்கம். வெற்றி விழா காணப் போகிறது பெரியாரின் போராட்டம்.

30 மார்ச் 1924 அன்று வைக்கம் போராட்டம் தொடங்கியது. வைக்கம் மகாதேவர் கோவில் தெருவில் அனைத்து சமூகத்தவரும் நடந்து செல்ல வழிவகை வகுத்த போராட்டம்தான் ‘வைக்கம் போராட்டம்’ ஆகும்.

குன்னப்பி (புலையர்), பாஹுலயன் (தீயர்), கோவிந்த பணிக்கர் (நாயர்) கொண்ட குழுவினர், மாலை அணிவிக்கப்பட்டு முன்நோக்கிச் சென்றனர். அம்மூவரும் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர். மறுநாள், ஒரு நாயர், இரண்டு ஈழவர் கொண்ட மூவர் குழுவினர் தடைப் பகுதியை அணுகினர். கைது செய்யப்பட்டு திருவனந்தபுரம் சிறைக்கு அனுப்பப்பட்டனர். இச்செய்தியானது அண்ணல் காந்தியடிகளுக்கு தந்தி மூலம் தெரிவிக்கப்படுகிறது. போராட்டத்தைச் சிறிது காலம் தள்ளி வைக்கலாம் என்று அவர் தந்தி அனுப்புகிறார். ஆனால் அதனை கே.பி.கேசவ மேனன் ஏற்கவில்லை. கே.பி.கேசவமேனன், டி.கே.மாதவன் ஆகியோர் தடை செய்யப்பட்ட பகுதியை நோக்கி நடந்து சென்று கைதாகினர். ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றனர்.

இதைத் தொடர்ந்து ஏ.கே.பிள்ளை, கே.வேலாயுத மேனன், கே.கேளப்பன், ஜார்ஜ் ஜோசப், கே.ஜி.நாயர், செபாஸ்டியன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறை தண்டனை பெற்றனர். அடுத்து வழிநடத்த தந்தை பெரியாரை அழைக்கிறார்கள். அவர் ஏப்ரல் 13 அன்று வைக்கம் வருகிறார்.

கோயிலின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடந்த போராட்டத்துக்குப் பெரியார் தலைமை வகித்தார். கோவை அய்யாமுத்து உள்ளிட்ட பலரும் தமிழ்நாட்டில் இருந்து வருகிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில் இருந்து அகாலிகள் வருகிறார்கள். போராட்டம் மிகத் தீவிரமாகிறது. இந்த நிலையில் கேரளாவைச் சேர்ந்தவர்கள் மட்டுமே போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும், மற்ற மாநிலத்தவர் கலந்து கொள்ளக் கூடாது என்றும், மாற்று மதத்தவர் கலந்து கொள்ளக் கூடாது என்றும் காந்தி கட்டுப்பாடுகள் விதிக்கிறார். ஆனால் அதனை சத்தியாக்கிரகிகள் ஏற்கவில்லை.

கோட்டயம் மாவட்டத்துக்கு நுழைய பெரியாருக்கு தடை விதிக்கப்பட்டது. அதை மீறிச் சென்றார், கைது செய்யப்பட்டார். மே 22 ஆம் தேதி கைதான பெரியார் ஜூன் 21 விடுதலை செய்யப்பட்டார். வெளியில் வந்தவர், மீண்டும் போராடினார். ஜூலை 18 அன்று இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டார் பெரியார். ஆகஸ்ட் 31 விடுதலை செய்யப்பட்டார்.

1925 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் தேதி அண்ணல் காந்தியடிகள் வைக்கம் வந்தார். சத்தியாகிரக ஆசிரமத்தில் சத்தியாகிரகிகளைச் சந்தித்துப் பேசினார். உயர் வகுப்பு பிரதிநிதிகளையும் சென்று சந்தித்தார். மூன்று திட்டங்களை வைத்தார். அதனை உயர் வகுப்பினர் ஏற்கவில்லை. உயர்சாதிக்குழு அவற்றை நிராகரித்தது. திருவிதாங்கூர் மகாராணியின் பிரதிநிதியையும் காந்தி சந்தித்தார். நாராயண குருவையும் காந்தி சந்தித்தார். குருவுடனான சந்திப்பின்போது பெரியார், இராஜாஜி, வ.வே.சு. ஐயர் ஆகியோர் உடன் இருந்தனர். ராணியையும் சந்தித்தார் காந்தி. 1925 மார்ச் 18 தடைகள் நீக்கப்பட்டு சாலைகள் திறந்து விடப்பட்டது. இதுதான் வைக்கம் போராட்டச் சுருக்கம் ஆகும்.

வைக்கம் போராட்ட (1924 - 25) காலத்தில் 114 நாட்கள் பெரியார் அங்கு இருந்திருக்கிறார். இரண்டு முறை கைது செய்யப்பட்டு மொத்தம் 74 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். அனைத்துச் சாலைகளும் திறந்து விடப்பட்டதால், போராட்டங்களை நிறுத்துவது என்று முடிவெடுக்கப்பட்ட 17.11.1925 அன்றும் பெரியார் வைக்கத்தில் இருந்தார். வெற்றி விழா பொதுக்கூட்டத்தில் பங்கெடுத்தார். ஆனாலும் இந்த வெற்றிக்கு தான் மட்டுமே காரணம் என்று சொல்லிக் கொண்டவர் அல்ல பெரியார்!

1933 ஆம் ஆண்டு கொச்சியில் நடந்த தொழிலாளர் மாநாட்டில் பெரியார் பங்கெடுத்தார். அப்போது பெரியாருக்கு முன் பேசிய சிலர், வைக்கம் போராட்டத்தின் வெற்றிக்கு பெரியார்தான் காரணம் என்று பேசினார்கள். இறுதியாகப் பேசிய பெரியார் சொன்னார்:

**“என்னைப் பற்றிப் பேசிய சிலர் வைக்கம் சத்தியாகிரகத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதை நடக்கவித்ததும், அது வெற்றியாய் முடிவு பெறக் காரணமாய் இருந்ததும் நானே ஆவேன் என்று பேசினார்கள். அதையும் ஒப்புக் கொள்ள முடியாமைக்கு நான் வருந்துகிறேன். வைக்கம் சத்தியாகிரகத்தில் பெயரளவுக்கு என் பெயர் அடிபட்டாலும், அதன் உற்சாகமான நடப்புக்கும், வெற்றிக்கும் வாலிப தோழர்களுடைய வீரம் பொருந்திய தியாகமும், சகிப்புத் தன்மையும் கட்டுப்பாடுமே காரணமாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்”** (‘குடிஅரசு’ 1.10.1933) என்று பேசினார் பெரியார். அதனால்தான் அவர் பெரியார்!

*- தொடரும் -*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.12.2024) தலைமைச் செயலகத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி.எழிலரசன் மற்றும் எஸ்.எஸ்.பாலாஜி ஆகியோர், வியட்நாம் நாட்டில் நடைபெறவுள்ள இந்திய – வியட்நாம் அரசுகளின் கலாச்சார பண்பாட்டு விழாவில் கலந்து கொள்ளச் செல்வதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (10.12.2024) தலைமைச் செயலகத்தில், வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவராக. தாம் மறு நியமனம் செய்யப்பட்டதற்காக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மெட்ரிக் கல்வி மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கான

# வருடாந்திர குடும்ப வருமான உச்சவரம்பை ரூ.8 இலட்சமாக உயர்த்துக!

## பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**புதுடெல்லி, டிச. 11 -**

**ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக் கான PostMatric மற்றும் PreMatric கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைக் கான வருடாந்திர குடும்ப வருமான உச்சவரம்பினை 2.50 இலட்சம் ரூபாயிலிருந்து, 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் மெட்ரிக் கல்விக்கு பிந்தைய உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைக்கான வருடாந்திர குடும்ப வருமான உச்சவரம்பினை ஒன்றிய அரசு ரூ.2.50 இலட்சம் என நிர்ணயித் துள்ள நிலையில், அதை உடனடியாக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று (10.12.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான (Economically Weaker Section) வருமான உச்சவரம்பை ஒன்றிய அரசு 8 இலட்சம் ரூபாயாக மாற்றியமைத் துள்ளதையும், தேசிய வெளிநாட்டு கல்வி உதவித்தொகை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான உயர்தரக் கல்வித் திட்டம் போன்றவற்றில் வருமான உச்சவரம்பு 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி யுள்ள முதலமைச்சர் அவர்கள், இதன் காரணமாக பின்தங்கிய நிலையில் வாழும் பல மாணவர்கள் மிகுந்த பயனை அடைந்துள்ளனர் என்று பெருமைபடக் குறிப்பிட்டுள்ளார்.

அகில இந்திய உயர்கல்வி ஆய்வு (All India Survey on Higher Education) தரவுகளின்படி, ஆதிதிரா விடர், பழங்குடியினர் மற்றும் சில பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களின் ஒட்டுமொத்த உயர் கல்வி சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio) மற்ற மாணவர் களைக் காட்டிலும் கணிசமாகக் குறைந் துள்ளது தனது கடிதத்தில் சுட்டிக்காட்டி யுள்ள முதலமைச்சர் அவர்கள், மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படை யில் ஒப்பிடுகையில், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத் தப்பட்ட மாணவர்களுக்கான ஒட்டுமொத்த உயர்கல்வி சேர்க்கை விகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது என்று கோடிட்டுக் காட்டியுள்ளார். இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் அதிக எண்ணிக்கை யில் சேர்வதற்குத் தேவையான வசதிகளை செய்து தருவது மிகவும் அவசியமானது என்றும் அவர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் மெட்ரிக் கல்விக்கு பிந்தைய உதவித் தொகை, ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க கணிசமாக பங்களிக்கும் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், பொருளாதாரத்தில் பின்தங் கிய பிரிவினருக்கான ஆண்டு வருமான உச்சவரம்பிற்கு ஏற்ப, இப்பிரிவினர் களுக்கான உதவித் தொகைக்கான ஆண்டு வருமான உச்சவரம்பினை 2.50 இலட்சம் ரூபாயிலிருந்து, 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கி னால், இச்சமூகங்களில் பெரிய அளவில் மாற்றங்கள் நிகழும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

எனவே, இந்த விவகாரத்தில் இந்தியப் பிரதமர் அவர்கள் இதில் தலையிட்டு, ஆதிதிராவிடர், பழங்குடி யினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு முந்தைய மற்றும் மெட்ரிக் கல்விக்கு பிந்தைய உதவித்தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைக்கான வருடாந்திர குடும்ப வருமான உச்சவரம்பினை 2.50 இலட்சம் ரூபாயிலிருந்து, 8 இலட்சம் ரூபாயாக உடனடியாக உயர்த்தி நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### “அரைத்த பொய்களையே அரைக்கும் பழனிசாமி”

# “சேக்கிழார் எழுதிய கம்பராமாயணம் படித்த அறிவாளிக்கு எப்படிப் புரியும்?”

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டன அறிக்கை!

சென்னை, டிச.11

அறிக்கைகளிலும் எக்ஸ் தளத்திலும் பேட்டிகளிலும் சட்டமன்றத்திலும் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி கொந்தளித்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் புஸ்வானமான நிலையில், இப்போது யூடியூப்பிலும் வந்து அதே புலம்பலை... அதே பொய்களைக் கடைப்பரப்ப ஆரம்பித்துவிட்டார் என சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

ஃபெஞ்சல் புயல், சாத்தனூர் அணைத் திறப்பு, பாலம் உடைப்பு, கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சிபிஐ விசாரணை உத்தரவு என அவருடைய சமீபத்திய பொய்களை எல்லாம் உடனுக்குடன் ஆதாரத்துடன் திமுக அரசு தவிடுபொடியாக்கியும் கூட, கொஞ்சமும் கூச்சப்படாமல் அதே பொய்களை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்.



**23ஆம் புலிகேசி நிலையில் எடப்பாடி பழனிசாமி!**

“ஆபத்தின் விளிம்பில் தத்தளிக்கும் போது அனைத்துக் கத்திகளும் உடைக்கிறதே என்னடா இது” என இம்சை அரசன் 23ஆம் புலிகேசியின் கேரக்டரைப் போல எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் சமீபத்திய பேட்டிகளும் அறிக்கைகளும், உண்மைகளால் தோலுரித்துத் தொங்கிய பிறகும், யூடியூப் மூலம் அதே ஆலாபனையைச் செய்கிறார். அதிலும் ஏற்கெனவே அரைத்த மாவை மொத்தமாகச் சேர்த்து அரைத்திருக்கிறார்.

’ஸ்டாலின்தான் வாராரு விடியல் தரப் போறாரு’ பாடலை யாரோ ஒருவர் கிண்டல் அடித்ததாகச் சொல்கிறார் பழனிசாமி. “வெற்றி நடை போட்ட தமிழகமே” என 2021 தேர்தல் பிரச்சாரத்தில் பாடிய பழனிசாமியைத்தான் மக்கள் வீட்டுக்கு அனுப்பினார்கள். விடியல் தருவதாகச் சொன்ன ஸ்டாலின் அவர்களைத்தான் ஆட்சியில் அமர்த்தினார்கள். அந்தச் சிறப்பான மூன்று ஆண்டு ஆட்சிக்கு நற்சான்றிதழ்தான் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த 40க்கு நாற்பது வெற்றி.

**நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க.வின் பொய்கள்!**

* “டெல்டா மாவட்டங்கள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக மாற்றினோம்” எனச் சொல்லி வந்த அதிமுகவின் பொய்யை நாடாளுமன்றத்தில் கேள்வி பதில் மூலம் அம்பலப்படுத்தினோம்.

* நாடாளுமன்றத்தில் சுரங்கம் மற்றும் கனிமத் திருத்த மசோதாவிற்கு திமுக எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனச் சட்டப்பேரவையில் பழனிசாமி சொன்ன பொய்யை அதிமுக எம்.பி. தம்பிதுரை அந்த மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்த விஷயத்தால் வெளிப்படுத்தினோம்.

* அ.தி.மு.க. ஆட்சியில் உடைந்த 8 பாலங்கள், கட்டடங்களைப் பட்டியல் போட்டோம்.

* சாத்தனூர் அணை திறப்பதற்கு முன்பே 5 முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டதற்கான ஆதாரத்தைக் காட்டினோம்.

இப்படித் தொடர்ந்து அவமானப் பட்ட பிறகும் கூட பழனிசாமிக்கு ஏன் புரியவில்லை. சேக்கிழார் எழுதிய கம்பராமாயணம் படித்த அறிவாளிக்கு எப்படிப் புரியும்?

**செக்குமாடு போல செயல்படும் எடப்பாடி!**

முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் பழனிசாமி அவர்கள் வைத்த பொய்க் குற்றச்சாட்டுகளை எத்தனையோ முறை மறுத்து அறிக்கை விட்டாலும், அதை எல்லாம் படிக்கவும் மாட்டேன், செய்திகளில் பார்க்கவும் மாட்டேன் எனச் செக்குமாடு போல அதே பொய்களை மீண்டும் மீண்டும் உளறிக்கொண்டிருக்கிறார் பழனிசாமி.

இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்ததை விட மிக அதிகமான மழை பொழிந்து ஃபெஞ்சல் புயல் சேதத்தை ஏற்படுத்தினாலும், முதலமைச்சரின் உத்தரவின் பேரில் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் பெரிய அளவில் ஏற்பட இருந்த உயிர்ச் சேதங்கள் தடுக்கப்பட்டன. வரலாறு காணாத மழைப்பொழிவு காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பெரும் சேதம் ஏற்படுவதைத் தடுக்கவே சாத்தனூர் அணை திறக்கப்பட்டது. அதுவும் ஐந்து முறை முறையான எச்சரிக்கை அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுத்து அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப் பட்ட பின்புதான் அணை திறக்கப்பட்டது.

அதுவும் அணையின் நீர்த்திறப்பானது எடுத்தெடுப்பில் அதிகமாக திறக்கப்படவில்லை. 32000 கன அடி, 63000 கன அடி, 106000, 130000 கன அடி, 168000 கன அடி என படிப்படியாகத்தான் அதிகரித்துத் திறக்கப்பட்டது. அதன் காரணமாகவே உயிரிழப்புகள் நடக்காமல் தடுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி எல்லாம் ஏற்கெனவே நீர்வளத்துறை அமைச்சர் ஆதாரத்தோடு தெரிவித்தும் அதைப் படிக்காத தற்குறி பழனிசாமி மீண்டும் மீண்டும் பொய் சொல்லிவருகிறார்.

**ஏரியைத் திறந்து விட்டு ஏராளமானோரை பலியாக்கிய அ.தி.மு.க. ஆட்சி!**

அ.தி.மு.க. ஆட்சியில் 2015-இல் எந்த முன் அறிவிப்புமின்றி திடுதிப்பென திறந்ததால் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தில் 289 பேர் பலியானார்கள். 23.25 லட்சம் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இந்த இரத்தக்கறையை மறக்கடிக்கத் துடிக்கும் பழனிசாமி அண்டப் புளுகை அள்ளிவிட்டுக் கொண்டிருக்கிறார்.

அடுத்ததாக, அ.தி.மு.க. ஆட்சியில் எந்தப் பாலங்களும் உடைந்து சேதாரம் ஆகவில்லை என்ற பொய்யை பழனிசாமி அடுக்குகிறார். அவருக்கு ஏற்கெனவே பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் அதிமுக ஆட்சியில் உடைந்து விழுந்த 7 பாலங்களின் கதைகளை எடுத்து கூறி இருந்தார். அதையும் காதில் போட்டுக்கொள்ளாமல் கண்டதையும் உளறி வருகிறார் பழனிசாமி.

ஃபெஞ்சல் புயலால் பெய்த கனமழைக்குச் சென்னையில் அதிகளவு நீர் தேங்காமல் மழைநின்ற உடனே வெள்ளநீர் வடிந்து சென்னை இயல்பு நிலைக்குத் திரும்பியது. அதை பொறுத்துக்கொள்ள முடியாத பழனிசாமி சென்னையில் மழையே பெய்யவில்லை என பேசிக்கொண்டு இருக்கிறார். கன மழை பெய்யாத சென்னைக்கு, பிறகு எதற்காக அதிமுக நிர்வாகிகளே மக்களுக்கு உதவி செய்யுங்கள் என அறிக்கை வெளியிட்டு விளம்பரம் தேடினீர்கள் பொய்ச்சாமி பழனிசாமி?

**முதல்வருக்கு பெருகும் ஆதரவை தாங்கிக்கொள்ள முடியவில்லை!**

தமிழ்நாட்டு மக்களின் நலனை மட்டுமே முன்வைத்து முதலமைச்சரின் தலைமையில் சிறப்பாகச் செயல்பட்டு வரும் திராவிட மாடல் ஆட்சியால், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருவதால் அதை தாங்கி கொள்ளமுடியாமல் வயிற்றெரிச்சலில் கூறிய பொய்களையே திரும்பத் திரும்ப எத்தனை முறை கூறினாலும் எடுபடாது பழனிசாமி. தமிழ்நாட்டு மக்கள் மனதில் பொய்யர்களால் என்றைக்குமே இடம் பிடிக்க முடியாது, நீங்கள் ஆயிரம் பொய்களைக் கூறினாலும் திராவிட மாடல் நல்லாட்சி மீது சிறு கீறல் கூட விழவைக்க முடியாது.

இவ்வாறு சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், எஸ்.கார்த்திக் தலைமையில் மாபெரும் புகழரங்கத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் மற்றும் பட்டை தீட்டப்பட்ட இளம் பேச்சாளர்கள் செங்கல்பட்டு ரிஷிசந்தோஷ், காஞ்சிபுரம் எஸ்.யாசர் அராபத் புகழுரைத்தனர்.